# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1955/6 - 2016 පෙබරවාරි මස 23 වැනි අඟහරුවාදා - 2016.02.23

*1955/6 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபைகள் அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச்சட்டம் இலக்கம் 01/2015

வடக்கு மாகாண, மாகாண சபையினால் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட, 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம்ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந்திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

பேரவைச்செயலகம்,
ஏ9 வீதி,
கைதடி,
2016.02.19.

**சுகாதார சேவைகள் நியதிச்சட்டம்**

வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்காக ஏற்பாடு செய்தல், வட மாகாணத்தின் மக்களுடைய சுகாதார மேம்பாடு மற்றும் பாதுகாப்புக்காக அத்தியாவசிய சேவைகளின் முறையான தொடர்ச்சியை ஏற்பாடு செய்தல் மற்றும் அதற்குத் தொடர்புபட்ட மற்றும் இடைநேர் விளைவான சகல விடயங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம்.

திருத்தப்பட்டவாறான 1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சுகாதார சேவைகள் சட்டத்துடன் இந்நியதிச் சட்டம் ஒவ்வாததாகும்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

வடக்கு மாகாணத்தின் மாகாண சபையினால், கீழே குறிப்பிட்டவாறு சட்டமாக்கப்படுகிறது :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்த நியதிச் சட்டமானது 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அதற்கு ஆளுநரின் சம்மதம் கிடைக்கும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பகுதி I

### மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை ஸ்தாபித்தல், அதன் யாப்பு மற்றும் பொறுப்புக்கள்

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை ஸ்தாபித்தல்.

2. (1) வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களமானது (இதகனகத்துப் பின்னர் ''திணைக்களம்'' எனக் குறிப்பிடப்படும்) அமைய வேண்டும் என்பதுடன், இந் நியதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக் கிணங்க அது நிர்வாகிக்கப்படும்.

(2) திணைக்களத்தினைச் சேர்ந்தஉத்தியோகத்தர்களின் நியமனம் இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றின் அதிகாரமானது (அனைத்து இலங்கை சேவையினைச் சார்ந்த உத்தியோகத்தர்களைத் தவிர) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி IV இற்கிணங்க ஆளுநருக்கு உரித்தானதாகும்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிகள்.

3. திணைக்களத்தின் பணிகளாக அமையக் கூடியவை -

(அ) இந் நியதிச் சட்டத்தின் இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார நிறுவனங்களை தாபித்தலும் நிர்வகித்தலும் மற்றும் பராமரித்தலும் ;

(ஆ) பொதுச் சுகாதாரம், சுகாதாரப் பிரச்சினைகள், போசாக்கு குடும்ப நலம், மகப்பேறு மற்றும் சிறுவர் பராமரிப்பு, நீர் மற்றும் உணவுத் தூய்மை மற்றும் சுற்றாடல் சுகாதாரம் சார்பாக மக்களுக்கு அறிவூட்டல் தொடர்பான சேவைகளை வழங்கும் நோக்கங்களுக்காக தேவைப்படும் இந்நியதிச் சட்டத்தின் இதனகத்துப் பின்னால் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல்.

(இ) மாகாண சுகாதார மேம்பாட்டுத் திட்டம், மற்றும் மாகாணத்திற்கான வருடாந்த மாகாண சுகாதாரத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

(ஈ) பந்தி (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிலையங்களுக்கான சகல வசதிகளையும் வழங்குதல் (மருந்துப் பொருட்களை தவிர)

(உ) திணைக்களம் மற்றும் பந்தி (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிலையங்களால் வழங்கப்படும் சேவைகளின் தேவைப்பாடுகளைச் சந்திப்பதற்குரிய ஆளணியினரை இனங்காணல் மற்றும் ஆளணியில் ஏற்படும் சரியான தேவைகளை உரிய அதிகாரத்தினருக்கு சிபார்சு செய்தல்.

(ஊ) திணைக்களத்தைச் சார்ந்த அனைத்து வகை உத்தியோகத்தர்களுக்கும் திறன் விருத்தி பயிற்சி நெறிகளை வழங்குதல்; மற்றும்

(எ) திணைக்களத்தின் பணிகளை சரியாக ஆற்றுதலை வசதிப்படுத்துவதற்குத் தேவையான ஏனைய அனைத்து விடயங்களையும் பொதுவாக செய்தல்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

4. (1) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டியதுடன் (இதனகத்துப் பின்னர் ''மாகாண பணிப்பாளர்'' எனக் குறிப்பிடப்படும்) அவர் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தலைவராக இருக்க வேண்டியதுடன் செயலாளரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(2) பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பிரதி மாகாண பணிப்பாளர் – சுகாதார சேவைகள்" எனக் குறிப்பிடப்படும்) மற்றும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - நிர்வாகம் (இதனகத்துப் பின்னர் "மாகாண பிரதிப் பணிப்பாளர் - நிர்வாகம்" எனக் குறிப்பிடப்படும்) ஆகியோர் நியமிக்கப்படலாம் என்பதுடன், அவர்கள் மாகாணப் பணிப்பாளரின் பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஆற்றுவதில் அவருக்கு உதவ வேண்டும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

5. (1) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்காக முறையே ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் இருக்க வேண்டும்.

(2) மாகாண பணிப்பாளரின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தமக்குரிய பிராந்தியங்களின் சுகாதார சேவைகளை வழங்குவதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் பொறுப்பாதல் வேண்டும்.

வருடாந்த சுகாதார திட்டம்.

6. (1) மாகாணம் தொடர்பான கீழ் குறிப்பிடப்படுவனவற்றினைக் கருத்திற் கொண்டு, மாகாணப் பணிப்பாளர் எதிர்வரும் ஆண்டுக்கான மாகாண சுகாதார திட்டத்தை தயாரித்தலை வசதிப்படுத்த வேண்டும்.

(அ) நில விஸ்தீரணத்துக்குத் தொடர்புடையதாகச் சனத்தொகை அதிகரிப்பு
(ஆ) நோய்கள் பரவுகை
(இ) மக்களின் போசாக்கு நிலை
(ஈ) சுகாதாரத்தின் மீது சூழலின் தாக்கம், மற்றும்
(உ) கிடைக்கக்கூடிய போக்குவரத்து வசதிகள்

அடுத்துவரும் ஆண்டிலே செயற்படுத்தத் தக்கதாக முன்மொழியப்பட்ட அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண செயற்பாடுகளின் விபரக் குறிப்பினை இந்தத் திட்டம் வழங்கும்.

(2) மாகாணப் பணிப்பாளர் மாகாண சுகாதார திட்டத்தினை செயலாளருக்கும், செயலாளர் அதனைப் பின்னர் மாகாண சுகாதார சேவைகள் ஆலோசனைச் சபைக்கு அதன் அவதானிப்புகளிற்காக சமர்ப்பிக்க வேண்டும். மாகாணத்தில் சுகாதார சேவைகளை வழங்குவதை வசதிப்படுத்துவதற்காக செயலாளர் கருதும் மாகாண சுகாதார சேவைகள் ஆலோசனைச் சபையின் அவதானிப்புக்களை உட்சேர்த்தல் பற்றி அவர் கருத முடிவதுடன், இத்திட்டத்தினை வருடாந்த சுகாதாரத் திட்டம் தொடர்புபட்ட வருடத்திற்கு முன்னுள்ள வருடத்தின் நவெம்பர் மாதம் 30 ஆந் (முப்பதாம்) திகதிக்கு முன்னர் அனுமதிப்பார். அதன் பின்னர் அமைச்சர் வாரியத்தின் அனுமதிக்காக, வருடாந்த சுகாதாரத் திட்டத்தினை சுகாதார அமைச்சரினூடாக அமைச்சர் வாரியத்திற்கு செயலாளர் சமர்ப்பிப்பார்.

(3) அமைச்சர் வாரியத்தின் அனுமதியுடன் அன்றேல், குறிப்பிட்ட ஒரு வருடத்தின் மாகாண சுகாதார அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்படாத அபிவிருத்தி அல்லது நிர்மாணச் செயற்பாடுகள் எவையும் அவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட முடியாது.

மாகாணத்தின் சுகாதார நிலை தொடர்பான வருடாந்த அறிக்கை.

7. முந்திய ஆண்டில் மாகாணத்தின் பொதுச் சுகாதார நிலை தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு வருடத்தினதும் முதல் காலாண்டுக்கு முன்னர் மாகாணப் பணிப்பாளர் செயலாளரிற்கு சமர்ப்பிக்க வேண்டும். இவ் அறிக்கையானது முந்திய ஆண்டில் வருடாந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் அடைந்த வெற்றி மற்றும் பலவீனங்களை புள்ளிவிபரங்களுடன் அடையாளப்படுத்துவதுடன், அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது பலவீனங்களைத் திருத்துவதற்கான செயற்பாடுகளை சிபார்சு செய்ய வேண்டும்.

உள்ளூராட்சிப் பகுதிகளுக்குள் சுகாதார நடவடிக்கைகள்.

8. மாகாணப் பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்தல் மூலம் வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் அல்லது ஆணையாளரினை அவர்களின் நிர்வாக எல்லைக்குரிய சுகாதார நிலைமைகள் தொடர்பான அவசியமான விபரங்கள் மற்றும் தகவல்களை வழங்கக் கோரலாம் என்பதுடன், அந்த செயலாளர் அல்லது ஆணையாளர் அவ்வாறான அறிவித்தல் மூலமான கோரிக்கைகளுக்கு பொருத்தமான தகவல்களை வழங்கி உதவ வேண்டும்.

விதிகளை ஆக்குவதில் அமைச்சருக்குரிய அதிகாரம்.

9. (1) இந்த நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடை முறைப்படுத்துவதற்காக தேவையான எந்த விடயத்திற்காகவும் அமைச்சர் விதிகளை ஆக்கலாம் அல்லது இந்த நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுகின்ற விதிகளை ஆக்கலாம்.

(2) இந்த பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது குறித்துரைக்கப்படுவதான பிறிதொரு திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாதலும் வேண்டும்.

(3) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் அமைச்சரால் ஆக்கப்பட்ட அந்த விதிகள் மாகாண சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்சொல்லப்பட்டவாறு அனுமதிக்கப்படாத எந்த விதியும் அது அனுமதிக்கப்படாத திகதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படு வேண்டும். எவ்வாறெனினும் அத்தகைய நீக்குகை சொல்லப்பட்ட விதியின் கீழ் முன்னர் எடுக்கப்பட்ட ஏதும் நடவடிக்கைகளுக்குப் பாதகமாயிருக்கக்கூடாது. எந்த விதியும் நீக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதியானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

## பகுதி II

### மாகாண சுகாதார சேவைகள் ஆலோசனைச் சபை மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு

மாகாண சுகாதார சேவைகள் ஆலோசனைச் சபை.

10. (1) மாகாண சுகாதார சேவைகள் ஆலோசனைச் சபையொன்று (இதனகத்துப் பின்னர் "ஆலோசனைச் சபை" எனக் குறிப்பிடப்படும்) உருவாக்கப்பட வேண்டும்.

(2) இந்த ஆலோசனைச் சபையினை அமைச்சர் நியமிப்பதுடன், கீழ் குறிப்பிடப்பட்ட விதிமுறைக்கமைய 19 அங்கத்தவர்களுக்கு மேற்படாத வாறு நியமிக்கலாம்.

(அ) பதவி வழி உறுப்பினர்கள், அதாவது -

(i) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
(ii) மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(iii) மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
(iv) மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்
(v) மாகாண சுதேச வைத்திய ஆணையாளர்
(vi) ஒவ்வொரு சுகாதார பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ; மற்றும்

(ஆ) "நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்" ஆக கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் அறியப்படுவர்.

(i) பிரிவு 3 இன் உப பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிலையங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் நான்கு மருத்துவ தொழில் வல்லுநர்கள் விசேடமாக முறையே சமுதாய மருத்துவம், பொது மருத்துவம், மகப்பேறு மற்றும் குழந்தை நோயியல் துறைகளிலிருந்தும்;

(ii) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களை முறையே பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக சுகாதார மற்றும் சமூக சேவைகள் துறைகளில் ஆகக்குறைந்து பத்து (10) வருடங்கள் அனுபவம் கொண்டவர் களிலிருந்து ஐவர்.

(3) பின்வருவோர் ஆலோசனைச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படவோ அல்லதுஉறுப்பினராகத் தொடர்ந்து இருக்கவோ தகைமையற்றவராவர்.

(அ) இலங்கைப் பிரசையொருவராக அல்லாதவிடத்து;

(ஆ) பதினெட்டு வயதினை அடையாதவரெனில்;

(இ) பாராளுமன்ற அல்லது ஏதாவது மாகாண சபை அல்லது ஏதாவது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகவோ இருத்தல் அல்லது ஆகவருமிடத்து;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் வங்குரோத்து அல்லது கடன் தீர்க்க வகையற்ற வராக அறிவிக்கப்பட்டவரெனில்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் சித்தசுவாதீன மற்றவராக அறிவிக்கப்பட்டவரெனில்;

(ஊ) ஒழுக்க பிறழ் நடத்தை சம்பந்தப்பட்ட ஏதாவது குற்றத்திற் காகவோ அல்லது ஆறு மாதத்திற்கு குறையாத சிறைத் தண்டனையைத் தீர்ப்பாகப் பெற்றவரெனில்;

(எ) இலங்கை அல்லது வேறு ஏதாவது நாட்டின் சட்ட நீதிமன்றினால் சிறைத்தண்டனைத் தீர்ப்பொன்றினை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது அனுபவித்துவிட்டவரெனில்;

(ஏ) ஆலோசனைச் சபை உறுப்பினராகத் தனது செயற்பாடுகளை ஆற்றுவதனைப் பாதிக்கும் சாத்தியப்பாடுள்ள ஏதாவது நிதி அல்லது வேறு ஆர்வமுள்ளவரெனில்;

(4) மாகாண சுகாதாரப் பணிப்பாளர், ஆலோசனைச் சபையின் தலைவராயிருக்க வேண்டியதுடன், ஆலோசனைச் சபையின் செயலாளர் ஆலோசனைச் சபையின் அங்கத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்படவும் வேண்டும்.

(5) பதவி வழி அங்கத்தவர் ஒவ்வொவரினதும் பதவிக்காலம் எனக் குறிப்பிடப்படுவது ஆலோசனைச் சபையில் அவர் அங்கத்தவராவதற்கு தகைமை பெற்றதான பதவியினை வகிக்கும் வரையான காலப்பகுதியாயிருக்க வேண்டும்.

(6) ஒவ்வொரு உறுப்பினர்களிற்கும் ஒரு வாக்கினை அளிப்பதற்கு உரிமையுண்டு. சமமாக அமையும் சந்தர்ப்பத்தில் தலைவருக்குத் தனது தீர்மான வாக்கினை அளிக்கும் உரிமையுண்டு.

(7) நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(8) அமைச்சர் ஒரு நியமிக்கப்பட்ட அங்கத்தவரை காரணங்கள் குறிக்கப்பட்டிருக்குமிடத்து பதவியிலிருந்து நீக்கலாம்.

(9) உப பிரிவுகள் (7) மற்றும் (8) இன்படி, நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவரின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாக அமைய வேணடும்.

(10) ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் ஒன்றின் முடிவில் பதவிக் காலத்தினை முடிவுறுத்துகின்ற ஒரு நியமிக்கப்பட்ட அங்கதத்தவர் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(11) நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவர், பதவி விலகல், இறப்பு அல்லது அமைச்சரால் நீக்கப்படுவதால் அல்லது வேறு வகையில் பதவி வகித்தலை வெறிதாக்குகையில் மேலேயுள்ள 2(ஆ) உப பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னுமொருவரை அமைச்சர் நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டவரை தனது முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சிய காலத்துக்கு மட்டும் பதவியை வகிக்க வேண்டும்.

(12) ஆலோசனைச் சபை ஆகக் குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அல்லது அவசியமானபோது கூடவேண்டும்.

(13) சபைச் செயலாளர் ஆலோசனைச் சபைக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்பதுடன், ஆலோசனைச் சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருதல் வேண்டும்.

(14) தலைவர் உட்பட ஆலோசனைச் சபையின் நிறைவெண் பதினொன்றாக (11) இருக்க வேண்டும்.

(15) ஆலோசனைச் சபையின் அமர்வுகளுக்கு சமுகமளிக்கும் அங்கத்தவர் களுக்குப் படிகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய படிகள், ஆளுநரின் உடன்பாட்டுடனும், நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடனும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஆலோசனைச் சபையின் செயற்பாடுகள்.

11. மாகாண மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமென மாகாணத்தில் திட்டமிடல் மற்றும் சுகாதார சேவைகள் வழங்கலிற்காக, பொதுவில் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளின் முன்னேற்றத்திற்காக அமைச்சரால் ஆலோசனைச் சபைக்கு அதன் ஆலோசனைக்காக அனுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சருக்கு சிபார்சுகள் மற்றும் அவதானிப்புகளை அளித்தல் ஆலோசனைச்சபையின் கடமைகளாயிருக்க வேண்டும்.

அபிவிருத்திக் குழு.

12. (1) பிரிவு 3 இன் உப பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலை மற்றும் நிறுவனத்திற்கும் அந்த நிறுவனத்தின் அபிவிருத்திக்காக ஒரு அபிவிருத்திக்குழுவினை அமைச்சரின் அனுமதியுடன் செயலாளர் நியமிக்கலாம்.

(2) உப பிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்திக் குழுவும் பின்வருவோரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(அ) பதவி வழி உறுப்பினர்கள், அதாவது -

(i) வைத்தியசாலை அல்லது நிறுவன பொறுப்பு வைத்திய அதிகாரி;
(ii) அந்நிறுவனம் அமைந்துள்ள உரிய பிரதேசத்தின் பிரதேச செயலாளர் ;
(iii) தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரத்திற்குக் குறையாத கட்டடங்கள் திணைக்கள பிரதிநிதியொருவர் ;
(iv) நிறுவனம் அமைந்துள்ள நிர்வாகப் பரப்பெல்லைக் குட்பட்ட ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையின் செயலாளர் அல்லது ஆணையாளர் ; மற்றும்

(ஆ) ''நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்'' ஆக அறியப்படும் கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் -

(i) அந்நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிலிருந்து நான்கு பிரதிநிதிகள் ;

(ii) அந்நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தில் சுகாதார மற்றும் சமூக சேவைகள் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆறு பேருக்கு மேற்படாதவர்கள்.

(3) பின்வருவோர் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப் படவோ அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து இருக்கவோ தகைமையற்றவராவர்.

(அ) இலங்கைப் பிரசையொருவராக அல்லாதவிடத்து;

(ஆ) பதினெட்டு வயதினை அடையாதவரெனில்;

(இ) பாராளுமன்ற அல்லது ஏதாவது மாகாண சபை அல்லது ஏதாவது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகவோ இருத்தல் அல்லது ஆகவருமிடத்து;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் வங்குரோத்து அல்லது கடன் தீர்க்க வகையற்ற வராக அறிவிக்கப்பட்டவரெனில்;
(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராக அறிவிக்கப்பட்டவ ரெனில்;

(ஊ) ஒழுக்க பிறழ் நடத்தை சம்பந்தப்பட்ட ஏதாவது குற்றத்திற்காகவோ அல்லது ஆறு மாதத்திற்கு குறையாத சிறைத் தண்டனையைத் தீர்ப்பாகப் பெற்றவரெனில்;

(எ) இலங்கை அல்லது வேறு ஏதாவது நாட்டின் சட்ட நீதிமன்றினால் சிறைத்தண்டனைத் தீர்ப்பொன்றினை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது அனுபவித்துவிட்டவரெனில்;

(ஏ) ஆலோசனைச் சபை உறுப்பினராகத் தனது செயற்பாடுகளை ஆற்றுவதனைப் பாதிக்கும் சாத்தியப்பாடுள்ள ஏதாவது நிதி அல்லது வேறு ஆர்வமுள்ளவரெனில்;

(4) பதவி வழி அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் பதவிக்காலம் எனக் குறிப்பிடப்படுவது அபிவிருத்திக் குழுவில் அவர் அங்கத்தவராவதற்கு தகைமை பெற்றதான பதவியினை வகிக்கும் வரையான காலப்பகுதியாயிருக்க வேண்டும்.

(5) ஒவ்வொரு உறுப்பினர்களிற்கும் ஒரு வாக்கினை அளிப்பதற்கு உரிமையுண்டு. சமமாக அமையும் சந்தர்ப்பத்தில் தலைவருக்குத் தனது தீர்மான வாக்கினை அளிக்கும் உரிமையுண்டு.

(6) நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(7) செயலாளர் ஒரு நியமிக்கப்பட்ட அங்கத்தவரை காரணங்கள் குறிக்கப் பட்டிருக்குமிடத்து அமைச்சரின் அனுமதியுடன் பதவியிலிருந்து நீக்கலாம்.

(8) மேலேயுள்ள உப பிரிவுகள் (6) மற்றும் (7) இன்படி, நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவரின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாக அமைய வேண்டும்.

(9) ஒப்பந்தத்தின்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் ஒன்றின் முடிவில் பதவிக் காலத்தினை முடிவுறுத்துகின்ற ஒரு நியமிக்கப்பட்ட அங்கத்தவர் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(10) நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவர், பதவி விலகல், இறப்பு அல்லது அமைச்சரால் நீக்கப்படுவதால் அல்லது வேறு வகையில் பதவி வகித்தலை வறிதாக்குகையில் மேலேயுள்ள 2(ஆ) உப பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னுமொருவரை அமைச்சர் நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டவரை தனது முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சிய காலத்துக்கு மட்டும் பதவியை வகிக்க வேண்டும்.

(11) உப பிரிவு 2 இன் உப பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர் அந்நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராயிருக்க வேண்டும். அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அபிவிருத்திக் குழுவின் செயலாளராயிருக்க வேண்டும். குழுக் கூட்ட அறிக்கைகளினை செயலாளர் பேணுதல் வேண்டும்.

(12) நிறுவனம் ஒன்றுக்காக நியமிக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்திக் குழுவும் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை நிறைவேற்றலாம்.

(13) இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் முன்னர் வைத்தியசாலை ஒன்றுக்காக ஏற்கனவே அமைக்கப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழு, அனைத்து தேவைகளிற்காகவும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுவாகக் கருத முடியும். இந்த நியதிச் சட்டத்தின் உப பிரிவு 1 இல் குறிப்பிட்டவாறு, இந் நியதிச் சட்ட ஏற்பாடுகளிற்கமைய, புதிய குழுவொன்று அமைக்கப்படும் வரை அத்தகைய குழுவின் அங்கத்தவர்கள் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்களாகப் பதவியினைத் தொடர முடியும்.

## பகுதி III - பொது

13. பிரிவு 3 இன் உப பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் யாவும் தேசிய சுகாதாரக் கொள்கைக்கு இணங்க எதுவித கட்டணங்களுமின்றி வழங்கப்பட வேண்டும். *இலவச சுகாதார சேவைகள்.*

14. இந்த நியதிச் சட்டத்தின் தமிழ் மற்றும் சிங்களம் அல்லது ஆங்கில உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படின், தமிழ் மொழியே மேலோங்கும். *மொழி ஒவ்வாமை.*

15. இந்தி நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினால் அன்றி – *பொருள்கோடல்.*

"திணைக்களம்" என்பது வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் மாகாணத் திணைக்களத்தைக் கருதும்;

"உள்ளூராட்சி மன்றம்" என்பது வடக்கு மாகாணத்தினுள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு மாநகர சபையினை, நகர சபையினை அல்லது பிரதேச சபையினைக் குறிக்கும் ;

"ஆளுநர்" என்பது வடக்கு மாகாணத்தின் ஆளுநரைக் குறிக்கும் ;

"மருத்துவத் தொழில் வல்லுநர்" என்பது மருத்துவ ஒழுங்கு விதிகளின் கீழ் ஒரு மருத்துவத் தொழில் வல்லுநராக பதிவு செய்யப்பட்ட நபரைக் குறிக்கும் ;

"அமைச்சர்" என்பது வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையின் சுகாதார விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரைக் குறிக்கும்;

"மாகாணம்" என்பது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணாத்தினைக் குறிக்கும் ;

"மாகாணப் பணிப்பாளர்" என்பது வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரைக் குறிக்கும் ;

"செயலாளர்" என்பது வடக்கு மாகாண சபையின் அமைச்சர் வாரியத்தின் சுகாதார விடயப் பொறுப்பு அமைச்சருக்கான அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

## அட்டவணை I

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மருத்துவ நிலையங்கள் - வடக்கு மாகாணம்
குணமாக்கல் பிரிவு

| வைத்தியசாலை வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| பொது வைத்தியசாலை | - | 1. கிளிநொச்சி | 1. முல்லைத்தீவு | 1. வவுனியா | 1. மன்னார் |
| ஆதார வைத்தியசாலைகள் ஏ - வகை | 1. தெல்லிப்பழை<br>2. பருத்தித்துறை | - | - | - | |
| ஆதார வைத்தியசாலைகள் பி - வகை | 1. சாவகச்சேரி<br>2. ஊர்காவற்றுறை | 1. முழங்காவில் | 1. மாங்குளம்<br>2. மல்லாவி | 1. செட்டிக்குளம் | - |
| பிரதேச வைத்தியசாலைகள் ஏ - வகை | 1. அச்சுவேலி<br>2. சங்கானை<br>3. கோப்பாய்<br>4. வல்வெட்டித்துறை | 1. அக்கராயன்குளம் | 1. புதுக்குடியிருப்பு<br>3. சம்பத்நுவர | - | 1. சிலாவத்துறை<br>2. முருங்கன்<br>3. தலைமன்னார் |
| பிரதேச வைத்தியசாலைகள் பி - வகை | 1. வேலணை | 1. பூநகரி | 1. ஒட்டுசுட்டான்<br>2. நட்டாங்கண்டல் | 1. நெடுங்கேணி | 1. அடம்பன்<br>2. பேசாலை<br>3. விடத்தல்தீவு |
| பிரதேச வைத்தியசாலைகள் சி - வகை | 1. நெடுந்தீவு<br>2. புங்குடுதீவு<br>3. அனலைத்தீவு<br>4. காரைநகர்<br>5. நயினாதீவு<br>6. மருதங்கேணி<br>7. வட்டுக்கோட்டை<br>8. பண்டத்தரிப்பு<br>9. அளவெட்டி<br>10. அம்பன்<br>11. குருநகர்<br>12. கரவெட்டி<br>13. கொடிகாமம்<br>14. கோண்டாவில்<br>15. மண்டைதீவு<br>16. மானிப்பாய்<br>17. வரணி<br>18. இளவாலை | 1. பளை<br>2. தர்மபுரம்<br>3. உருத்திரபுரம்<br>4. வேரவில்<br>5. வட்டக்கச்சி | 1. உண்ணாப்புலவு<br>2. அளம்பில்<br>3. கொக்கிளாய்<br>4. மூங்கிலாறு | 1. உழுக்குளம்<br>2. பாவற்குளம்<br>3. பூவரசங்குளம்<br>4. நேரியகுளம்<br>5. சிதம்பரபுரம்<br>6. புளியங்குளும்<br>7. மாமடுவ | 1. எருக்கம்பிட்டி<br>2. வங்காலை<br>3. நானாட்டான்<br>4. பெரிய பண்டிவிரிச்சான் |
| ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு | 1. சுன்னாகம்<br>2. ஏழாலை<br>3. இணுவில்<br>4. கைதடி<br>5. காங்கேசன்துறை<br>6. கொக்குவில்<br>7. பலாலி<br>8. பருத்தித்துறை<br>9. புன்னாலைக் கட்டுவன்<br>10. புத்தூர்<br>11. தொல்புரம்<br>12. உடுவில் | 1. ஆனையிறவு<br>2. இரணைதீவு (ஜெயபுரம்)<br>3. கண்டாவளை<br>4. வன்னேரிக்குளம் | 1. ஐயங்கன்குளம்<br>2. துணுக்காய்<br>3. முள்ளியவளை<br>4. கிரிபன்வெவ<br>5. அம்பலவன் பொக்கனை<br>6. கரிப்பட்டமுறிப்பு | 1. ஓமந்தை<br>2. சூடுவெந்தபுலவு | 1. இரணை இலுப்பைக்குளம்<br>2. மறிச்சுக்கட்டி<br>3. திருக்கேதீஸ்வரம்<br>4. வெள்ளாங்குளம்<br>5. பெரியமடு<br>6. தாராபுரம்<br>7. வேப்பங்குளம்<br>8. பண்டாரவெளி |

**அட்டவணை** I (தொடர்ச்சி)

| வைத்தியசாலை வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| | 13. உரும்பிராய்<br>14. முள்ளியான்<br>15. வட்டுக்கோட்டை<br>16. எழுவைத்தீவு<br>17. பண்ணை (யாழ்) | | | | |
| மார்புநோய் சிகிச்சை நிலையம் | 1. யாழ்ப்பாணம் | 1. கிளிநொச்சி | 1. முல்லைத்தீவு | 1. வவுனியா | 1. மன்னார் |
| பால்நோய் தடுப்பு நிலையங்கள் | - | 1. கிளிநொச்சி | 1. முல்லைத்தீவு | 1. வவுனியா | 1. மன்னார் |

**நோய்த்தடுப்புப் பிரிவு**

| வைத்தியசாலை வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் | 1. சாவகச்சேரி<br>2. பருத்தித்துறை<br>3. ஊர்காவற்றுறை<br>4. தெல்லிப்பழை<br>5. சண்டிலிப்பாய்<br>6. கோப்பாய்<br>7. வேலணை<br>8. நல்லூர்<br>9. உடுவில்<br>10. சங்கானை<br>11. கரவெட்டி | 1. கிளிநொச்சி<br>2. பூநகரி<br>3. கண்டாவளை<br>4. பளை | 1. முல்லைத்தீவு<br>2. மல்லாவி<br>3. புதுக்குடியிருப்பு<br>4. ஒட்டுசுட்டான்<br>5. சம்பத்நுவர | 1. வவுனியா<br>2. செட்டிக்குளம்<br>3. வவுனியா தெற்கு<br>4. வவுனியா வடக்கு | 1. மன்னார்<br>2. நானாட்டான்<br>3. மாந்தை கிழக்கு<br>4. முசலி<br>5. மடு |
| மலேரியா தடையியக்கம் மற்றும் தெளிக்கும் நிலையங்கள் | 1. யாழ்ப்பாணம் | 1. கிளிநொச்சி | 1. முல்லைத்தீவு | 1. வவுனியா | 1. மன்னார் |
| பாடசாலை பற்சிகிச்சை நிலையம் | 1. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி<br>2. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி<br>3. யாழ்ப்பாணம் புனித பத்திரிசிரியார் கல்லூரி<br>4. சுன்னாகம் இராமநாதன் கல்லூரி<br>5. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி<br>6. மானிப்பாய் இந்துக் கல்லூரி<br>7. பாடசாலை பற்சிகிச்சை நிலையம், பிரதேச வைத்தியசாலை, கோண்டாவில்<br>8. பாடசாலை பற் சிகிச்சை நிலையம், பிரதேச வைத்திய சாலை, வேலணை<br>9. வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி<br>10. அளவெட்டி அருணோதய கல்லூரி | 2. கிளிநொச்சி மகா வித்தியாலயம் | 1. சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனை, முல்லைத்தீவு | 1. இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்<br>2. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்<br>3. வவுனியா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்<br>4. வவுனியா கோவில் குளம், புதுக்குளம் | 1. முன் பருவ பற் சிகிச்சை நிலையம், புனித சேவியர் மகளிர் கல்லூரி, மன்னார்<br>2. முன் பருவ பற் சிகிச்சை நிலையம், சித்தி விநாயகர், இந்துக் கல்லூரி, மன்னார்<br>3. முன் பருவ பற் சிகிச்சை நிலையம், அல் அஸார் மகா வித்தியாலயம் மன்னார்<br>4. முன் பருவ பற் சிகிச்சை நிலையம், புனித ஆன் மத்திய மகா வித்தியா லயம், வங்காலை |

## அட்டவணை I *(தொடர்ச்சி)*

*கிராமோதய சுகாதார நிலையம்*

**சு. வை. அ. சாவகச்சேரி**

1. கச்சாய்
2. உசன்
3. மந்துவில்
4. மட்டுவில் தெற்கு
5. மறவன்புலோ

**சு. வை. அ. சங்கானை**

1. பண்ணாகம்

**சு. வை. அ. பருத்தித்துறை**

1. வியாபாரிமூலை
2. திக்கம்
3. ஆத்தியடி
4. தும்பளைக் கிழக்கு
5. கற்கோவளம்
6. மணல்கட்டு
7. குடத்தனை
8. தொண்டமனாறு
9. உடுத்துறை
10. மாமுனை

**சு. வை. அ. ஊர்காவற்றுறை**

1. அல்லைப்பிட்டி

**சு. வை. அ. சண்டிலிப்பாய்**

1. சாவல்காடு
2. முள்ளி
3. பிரான்பற்று
4. சில்லாலை

**சு. வை. அ. நல்லூர்**

1. அரியாலை

**சு. வை. அ. உடுவில்**

1. தாவடி
2. சங்குவேலி
3. ஈவினை

**சு. வை. அ.கோப்பாய்**

1. ஊரெழு
2. நீர்வேலி
3. அச்செழு
4. வாதரவத்தை

**சு. வை. அ.கரவெட்டி**

1. கொற்றாவத்தை

**சு. வை. அ. தெல்லிப்பழை**

1. அளவெட்டி
2. சீதகபுரம்
3. செனங்கலட்டி
4. குட்டியபுலம்
5. குலமங்கால்

**சு. வை. அ. கரைச்சி**

1. சிவநகர்
2. ஆணைவிழுந் தான்
3. புதுமுறிப்பு
4. ஸ்கந்தபுரம்
5. சாந்தபுரம்
6. யூனியன்குளம்
7. உதயநகர் மேற்கு
8. ராமநாதபுரம்
9. கனகாம்பிகைக் குளம்
10. மலையாளபுரம்

**சு. வை. அ. கண்டாவளை**

1. கல்மடுநகர்
2. புளியம்பொக் கணை
3. கல்லாறு
4. உமையாள்புரம்
5. புன்னைநீராவி

**சு. வை. அ. பூநகரி**

1. நாச்சிக்குடா
2. 4 ஆவது மைல் கல்
3. கிராஞ்சி
4. இரணைமாதா நகர்
5. தம்பிராய்
6. ஞானிமடம்
7. வலைப்பாடு

**சு. வை. அ. பளை**

1. இயக்கச்சி
2. கரந்தை

**சு. வை. அ. முல்லைத்தீவு**

1. கள்ளப்பாடு
2. சிலாவத்தை
3. முள்ளிவாய்க் கால்
4. அளம்பில்
5. குமிழமுனை
6. உடுப்புக்குளம்
7. தண்ணீரூற்று
8. நீராவிப்பிட்டி
9. மாமூலை
10. வற்றாப்பளை

**சு. வை. அ. மல்லாவி**

1. கல்விழான்
2. தேராங்கண்டல்
3. ஐயங்கன்குளம்
4. பாண்டியன்குளம்
5. பனங்காமம்
6. பாலிநகர்
7. வன்னிவிளாங் குளம்

**சு. வை. அ. புதுக்குடியிருப்பு**

1. இரணைப்பாலை
2. கோம்பாவில்
3. கைவேலி
4. வள்ளிபுனம்
5. சுதந்திரபுரம்
6. விசுவமடுகிழக்கு
7. அம்பலவன்பொக் கணை

**சு. வை. அ. ஒட்டுசுட்டான்**

1. கூழாமுறிப்பு
2. ஒதியமலை
3. தண்டுவன்
4. கற்சிலைமடு
5. முத்தையன் கட்டு இடதுகரை
6. முத்தையன் கட்டு வலதுகரை
7. அம்பகாமம்
8. கரிப்பட்டமுறிப்பு
9. திருமுறிகண்டி

**சு. வை. அ. வெலிஓயா**

1. ஜானகபுர
2. சம்பத்நுவர
3. எத்தாவெட்டுனு வெவ

**சு. வை. அ. வவுனியா**

1. பண்டாரிக்குளம்
2. சமனம்குளம்
3. மகாறம்பைக்குளம்
4. கூமாங்குளம்
5. ராஜேந்திரன்குளம்
6. நெளுக்குளம்
7. ஈச்சன்குளம்
8. சாத்திரிக் கூழாங்குளம்
9. பன்றிகைத்தகுளம்
10. பாலமோட்டை
11. சேமமடு
12. சாந்தசோலை
13. தவசிகுளம்
14. சாலம்பைக்குளம்
15. கதிர்வேலர் பூவரன்குளம்
16. நொச்சிக்குளம் (மாளிகை)
17. செக்கட்டிப்புலவு
18. சமயபுரம்

**சு. வை. அ. வவுனியா வடக்கு**

1. கனகராயன்குளம்
2. நயினாமடு
3. புளியங்குளம்
4. குளவிசுட்டான்
5. கற்குளம்
6. பட்டிகுயிருப்பு
7. சின்னடம்பன்
8. நெடுங்கேணி
9. ஒலுமடு

**சு. வை. அ. வவுனியா தெற்கு**

1. அலகல்ல
2. மடுகந்த
3. அக்போபுர
4. கலாபோ பொவஸ்வெவ
5. ரங்கெத்கம

**சு. வை. அ. செட்டிக்குளம்**

1. வாரிக்குட்டியூர்
2. ஆண்டிய புளியங் குளம்
3. கணேசபுரம்
4. தட்டாங்குளம் திட்டம்
5. மணியர்குளம் திட்டம்
6. மெனிக்பாம்
7. முதலியார்குளம்

**சு. வை. அ. மன்னார்**

1. சின்னக்கரிசல்
2. புதுக்குடியிருப்பு
3. தாழ்வுபாடு
4. பள்ளிமுனை
5. தாராபுரம்
6. தலைமன்னார் முனை
7. எருக்கலம்பிட்டி

**சு. வை. அ. நானாட்டான்**

1. மடுக்கரை
2. ஜீவநகர்
3. கற்கடந்தகுளம்

**சு. வை. அ. முசலி**

1. அரிப்பு
2. பாலைக்குழி
3. கொண்டைச்சி
4. அகத்திமுறிப்பு
5. பொற்கேணி
6. தம்பட்டமுசலி
7. புதுவெளி
8. பிச்சவாணிகுளம்
9. கரடிகுழி
10. சன்னார்

**சு. வை. அ. மாந்தை மேற்கு**

1. விடத்தல்தீவு மேற்கு
2. இலுப்பைக் கடவை
3. மூன்றாம்பிட்டி
4. வடகண்டல்
5. ஈச்சிலவாகை
6. வாத்திமடை
7. பெய்யாமடுகிழக்கு
8. சொர்ணபுரி

**சு. வை. அ. மடு**

1. பெரியபண்டி விரிச்சான்
2. சின்ன வாழையன்கட்டு
3. குஞ்சிகுளம்
4. கட்டையடம்பன்
5. தச்சனமருதமடு

**விசேட சேவைப் பிரிவுகள்**

| நிறுவன வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| புற்றுநோய் வைத்தியசாலை | 1. தெல்லிப்பளை | - | - | - | - |
| முள்ளந்தண்டு பாதிப்புற்றோர் நிலையம் | - | - | - | 1. வவுனியா | - |
| செயற்கை உறுப்பு மற்றும் அவயவச் சீராக்கல் நிலையம் | - | 1. கிளிநொச்சி | - | 1. வவுனியா | - |

**பயிற்சி நிறுவனங்கள்**

| நிறுவன வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| பிரதேச பயிற்சி நிலையம் | 1. பண்ணை (யாழ்ப்பாணம்) | - | - | - | - |
| தாதிய பாடசாலை | - | - | - | 1. வவுனியா | - |

**சமூகம் சார்ந்த நிறுவனங்கள்**

| நிறுவன வகை | யாழ்ப்பாணப் பிராந்தியம் | கிளிநொச்சி பிராந்தியம் | முல்லைத்தீவு பிராந்தியம் | வவுனியா பிராந்தியம் | மன்னார் பிராந்தியம் |
|---|---|---|---|---|---|
| உளநல இடைத்தர பராமரிப்பு பிரிவுகள் | 1. தெல்லிப்பளை<br>2. பருத்தித்துறை | - | - | 1. செட்டிக்குளம் | - |
| உளநல நீண்டகால பராமரிப்பு பிரிவுகள் | 1. தெல்லிப்பளை | - | - | - | - |
| பிராந்திய போதையுற்றோர் புனர்வாழ்வு நிலையம் | 1. சாவகச்சேரி | - | - | - | - |
| உளநல சமூக ஆதரவு நிலையம் | 1. மருதங்கேணி | 1. மலையாளபுரம்<br>2. பூநகரி | 1. தேராவில்<br>2. துணுக்காய் | 1. மருதோடை | 1. அடம்பன்<br>2. முசலி |

3- 222

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.